# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 202 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 18.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# 'தமிழ் மண்ணின் மகத்தான இசைக் கலைஞர் தேவா...'

## முதலமைச்சர் விஜய் மற்றும் நடிகர்கள், அரசியல் கட்சி தலைவர்கள் புகழஞ்சலி



'தமிழ்த் திரையுலகில், 'தேனிசைத் தென்றல்' என்ற அடைமொழியோடு ரசிகர்களைதனது எளிய, துள்ளலான மெட்டுகளால் கட்டிப்போட்ட இசையமைப்பாளர் தேவா, இசைப் பிரியர்களையும் திரைத் துறையையும் கண்ணீரில்ஆழ்த்திவிட்டு இன்று (அக்.17) காலை இயற்கை எய்தினார். அவரது மறைவுக்கு தமிழ் திரையுலகினர் புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

மநீம தலைவரும், நடிகருமான கமல்ஹாசன் எம்.பி: அன்புச் சகோதரர் தேவா மறைந்துவிட்டார் என்கிற செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. உற்சாகமும் துறுதுறுப்பும் சிறு நகைச்சுவைக்கும் பெரிதாகச் சிரிக்கும் இயல்பும் கொண்டு வளையவந்தவர்.

'அவ்வை சண்முகி', 'பம்மல் கே சம்பந்தம்', 'பஞ்சதந்திரம்' படங்களில் நாங்கள் இணைந்து வேலை செய்த காலங்களின் கலகலப்பு நினைவில் எழுகிறது. அவருக்கு என் அஞ்சலி. அவரது குடும்பத்தாருக்கும் என் ஆறுதல்களும் இரங்கல்களும்.

நடிகர் சரத்குமார்: 'இசை தென்றல் என போற்றப்படும் என் அன்புக்குரிய சகோதரர் தேவாவின் மறைவு செய்தி மிகுந்தஅதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. திறமையான இசையமைப்பாளரான அவரை திரையுலகுக்கு அறிமுகப்படுத்தியதில் பெருமையடைகிறேன். 'சூரியன்', 'வேடன்', 'நம்ம அண்ணாச்சி', 'நட்புக்காக' ஆகிய படங்களில் அவருடன் இணைந்து பணியாற்றிய நினைவுகளின் தருணங்களை ஒருபோதும்மறக்க முடியாது.

அவரது தனித்துவமான மற்றும் இன்னிசையால் ரசிகர்களின் இதயத்தில்நீங்காதஇடம் பிடித்தவர் தேவா. அவர் இன்று நம்மிடம் இல்லி என்றாலும் அவரின் இசை என்றென்றும் நம் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும்.'

டி.ராஜேந்தர்: 'தமிழ்த் திரையுலகத்தில் 400-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் இசையமைத்து, தன் தித்திக்கும் இசையால் திரை உலகத்தையே கட்டி ஆண்ட அந்த தேனிசை தென்றல் தேவா மறைந்து விட்டார் என்றசெய்திநெஞ்சத்தை வாட்டுகின்றது. அந்த தேனிசைத் தென்றல் ஓய்ந்தது ஏன்? அந்த திரையுலகத்தின் இசைதூண் சாய்ந்தது ஏன்? தெரியவில்லை.நெஞ்சம் தாங்கவில்லை.

தமிழ் திரை உலகத்தின் சூப்பர் ஸ்டார் நம்முடைய ரஜினிகாந்த் தொடங்கி, உலக நாயகன் கமல்ஹாசன் என்று அத்தனை முன்னணி நட்சத்திரங்களின் படங்களுக்கும் மட்டுமல்லாமல், எண்ணற்ற நட்சத்திரங்களின் படங்களுக்கு இசையமைத்து, அந்த படங்களை எல்லாம் ஜொலிக்க வைத்தவர். வெற்றி முத்திரையை பதித்து காட்டியவர்.

எந்த இயக்குநர் என்றாலும் அவர்களிடத்திலே எளிமையாக பழகக்கூடிய ஒரு இசையமைப்பாளராய், தயாரிப்பாளருக்கு கைகொடுக்கும் இசையமைப்பாளராய், வாழ்ந்து காட்டியவர் தான் தேவா.

என் மகன் சிலம்பரசன் நடித்த 'தம்' திரைப்படத்தில் 'கலக்குவேன் கலக்குவேன்... கட்டம் கட்டி கலக்குவேன்'... என்று அத்தனை பாடல்கள் மூலம் கலக்கியவர், இன்றைக்கு கலங்க வைத்துவிட்டு சென்றுவிட்டாரே என்பதை நினைக்கும் போது நெஞ்சம் தாங்கவில்லை. அவரை இழந்து வாடக்கூடிய தமிழ் திரை உலகத்தினருக்கும், அவருடைய இல்லத்தாருக்கும், என்னுடைய ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கல்.'

தேவ கானம் என்று போற்றப்பட்ட தனித்துவமிக்க 'கானா' பாடல்களாலும்,துள்ளல் இசையாலும், இனிமையான மெட்டுகளாலும், மண்ணின் மணம் கமழும் பாடல்களாலும் மக்களின் இதயத்தோடு இரண்டறக் கலந்த தேவாவின் மறைவு இசையுலகிற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவருடைய இன்னிசையில் வெளிப்பட்ட நாட்டுப்புறத் தன்மையும், எளிய மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்திய பாடல்களும் தமிழ்த் திரையிசை வரலாற்றில், காலத்தால் அழியாத தடங்களாக என்றும் நிலைத்திருக்கும்.

என்னுடைய முதல் படமான பாஞ்சாலங்குறிச்சியை தம்முடைய இன்னிசையால் வெற்றி காவியமாக்கிய தேவா மறைவு தனிப்பட்ட முறையில் என் மனதை மிகவும் கனக்கச் செய்கிறது. தமிழ் மண்ணின் மகத்தான இசைக் கலைஞரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், திரையுல நண்பர்களுக்கும், இசை ரசிகர்களுக்கும் என்னுடைய ஆறுதலை தெரிவிப்பதோடு, துயரினை பகிர்ந்து கொள்கிறேன்.

'தேனிசைத் தென்றல்' தேவாவின்மூச்சக்காற்று நின்றபோதும் அவர் படைத்தளித்த இசை காற்று தமிழர் உள்ளங்களில் என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.'

நடிகர் விஜய் சேதுபதி: 'தமிழ் திரையுலகின் இசை உலகில் தனக்கென ஒரு முத்திரை பதித்த இசையமைப்பாளர் தேவாவின் மறைவு மிகுந்தவேதனைஅளிக்கிறது. அவரது இசையும், பாடல்களும்என்றும்நம் நினைவுகளில் வாழும். ஆழ்ந்த இரங்கல்.'

நடிகை சிம்ரன்: 'இந்த துயரமானசெய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைந்தேன். பல தசாப்தங்களாக தேனிசை தென்றல் தேவாவின் இன்னிசை பாடல்கள் நமது வாழ்விலும், நினைவிலும் ஓர் அங்கமாக இருந்து வருகின்றன. லடசக்கணக்கான மக்களின் மனங்களில் அவரின் பாடல்களுக்கு தனித்த இடம் உண்டு. காலத்தால் அழியாத அவரின் பாடல்களின் வழியாகஅவரின்பாரம்பரியம் என்றென்றும் நிலைத்திருக்கும். அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கல். ஓம் சாந்தி.

பாடகர் ஸ்ரீனிவாஸ்: 'தேவா இனி நம்மிடம் என்பதுமிகவும்அதிர்ச்சி அளிக்கிறது. அவரின் இசை மேதமையையும் கடந்து, அவரது மனிதாபிமானம், அன்பான குணத்துக்காகவும் நான் அவரைபெரிதும்நேசிக்கிறேன். திரையுலகில் இப்படி ஒருவரை காண்பது மிகவும் அரிது. அவரை நேசிக்கும் லட்சக் கணக்கான ரசிகர்களில் ஒருவனாக அவரின் தனித்துவமான இசை, மனிதாபிமானம்,நகைச்சுவை உணர்வுகளிம் மூலம் உங்களை நினைவில் வைத்திருப்போம். போய் வாருங்கள் அய்யா.'

ரஜினி, கமல் மட்டுமல்லாமல், கேப்டன் விஜயகாந்துக்கும் 'பாசமுள்ள பாண்டியரே' உள்ளிட்ட பல வெற்றிப்பாடல்களை தேவா அளித்திருக்கிறார். குறிப்பாக, 'வாராரு அழகர்வாராரு'என்றதேவாவின் பாடல் இல்லாத சித்திரைத் திருவிழாவை மதுரைக்காரர்களால் நினைத்துப் பார்க்கவே முடியாது.

நாயகர்களுக்கான மாஸ் பாடல்கள் மட்டுமின்றி, மனதை வருடும் மெல்லிசைப் பாடல்களிலும் தேவாவுக்கு நிகர் தேவாதான்.ஆசை,காதல் கோட்டை, கண்ணெதிரே தோன்றினாள், காலமெல்லாம் காதல் வாழ்க, ஆஹா என நூற்றுக்கணக்கானதிரைப்படங்களில் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும் மெல்லிசையை தேவா தந்துள்ளார். முன்னாள் முதல்வர் கருணாநிதிதான், தேவா இசையின் இனிமையை மெச்சி 'தேனிசைத் தென்றல்' என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினார்.

80-களில் தனது திரையிசைப் பயணத்தைத் தொடங்கிய அவர் இன்றைய இளைஞர்களான அனிருத் உள்ளிட்டோரின் இசையிலும் எந்தத் தலைக்கனமும் இல்லாமல் நட்புணர்வோடு பாடியுள்ளார். அண்மைக்காலமாக, அவரது இசைக் கச்சேரிகளும் எல்லா ஊர்களிலும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன. தமிழ் வெகுசன இசை வரலாற்றை தேவா அவர்களை விடுத்துவிட்டு எவராலும் எழுத முடியாது. பல அத்தியாயங்களை அவருக்கென ஒதுக்கியாக வேண்டும்.

ஒருபுறம் இசைஞானி இளையராஜா, மறுபுறம் இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் கோலோச்சிய காலத்திலும் தேவா தனக்கெனத் தனிப்பாதை அமைத்து வெற்றி கண்டார். இசையில் வல்லவர் என்பதைத் தாண்டி, மிகவும் நல்லவர் என்ற பெயரையும் பழகிய அனைவரிடமும் பெற்றவர்தான் தேவா.

தேவாமண்ணைவிட்டு மறைந்தாலும் அவரது தேனிசைத் தென்றல் வீசுவது நிற்காது. தேவாவை இழந்து வாடும் அவரது மகன் இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா, சகோதரர் முரளி உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், திரையுலக நண்பர்களுக்கும், தேவா அவர்களின் ரசிக நெஞ்சங்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில், "பிரபல இசையமைப்பாளர் அன்புச் சகோதரர் "தேனிசைத் தென்றல்" தேவா உடல்நலக்குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். எளிய பின்னணியில் இருந்து வந்து, எளிய மக்களின் வாழ்வியலைதன் இசையால் பிரதிபலித்தவர் தேவா. மாஸ், மெல்லிசை, பக்தி என அனைத்து வகையான பாடல்களிலும்தனி முத்திரை பதித்தவர்.

தேவாவின் "கானா" பாடல்களுக்கு துள்ளாத கால்கள் இல்லை என்று சொல்லும் அளவிற்கு அனைவரின் உள்ளங்களிலும் நிறைந்திருக்கிறது அவருடைய இசை.

எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் மீது பெரும்மதிப்பும்,நம் கழகத்தின் மீது பேரன்பும் கொண்ட சகோதரர் தேவா,நம்கழகத்திற்காக மெட்டமைத்த பிரச்சாரப் பாடல்கள் என்றைக்கும் அதிமுக தொண்டர்களின் இதயங்களில் தனித்த இடம் பெற்றவை. "தேனிசைத் தென்றல்" தேவா மறைவு என்பது ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தாருக்கும், திரைத் துறை மற்றும் இசைத் துறையைச் சார்ந்தோருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த அவர்தம் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், "தமிழ்த் திரையுலகின் இசை ரசிகர்களின் இதயங்களில் நீங்கா இடம்பிடித்த 'தேனிசைத் தென்றல்' இசையமைப்பாளர் தேவா மறைவு மிகுந்த வேதனையையும் பேரதிர்ச்சியையும் அளிக்கிறது. அவரது மறைவால் இசையுலகம் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பைச் சந்தித்துள்ளது.

தனது தனித்துவமான இசையாலும், இனிமையான மெட்டுகளாலும், மக்கள் மனங்களில் என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும் எண்ணற்ற பாடல்களாலும் தமிழ் இசை உலகில் அழியாததடம்பதித்தவர் தேவா.

அவரது இசை, தலைமுறைகள் பல கடந்தும் நம் நினைவுகளிலும் இதயங்களிலும் உயிர்ப்புடன் வாழும். அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், திரையுலகினருக்கும், இசை ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கிறேன்" என தனது இரங்கலை பதிவு செய்துள்ளார்.

பாமகதலைவர் அன்புமணி ராமதாஸ் பகிர்ந்துள்ள இரங்கல் செய்தியில், "புகழ்பெற்ற தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளரும், தேனிசைத் தென்றல் என்று போற்றப்பட்டவருமான தேவா உடல்நலக் குறைவால் காலமானார்என்றசெய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

தமிழ்த் திரையுலகுக்கு இசையமைப்பாளர் தேவாவின் பங்களிப்பு மிகப்பெரியதாகும். எளிய பின்னணியிலிருந்துவந்ததேவா,தமிழ்த் திரையுலகை இசைஞானி இளையராஜா, இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் ஆட்சி செய்து கொண்டிருந்த நிலையில், தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்து இசை சாம்ராஜ்யம் நடத்தியவர். தமிழ்த்திரையுலகின் முன்னணி நடிகர்கள் அனைவரின் படங்களுக்கும் இசையமைத்த சிறப்பு தேவாவுக்கு உண்டு. ரஜினிகாந்த், கமலஹாசன், இன்றைய முதல்வர் விஜய், அஜித் உள்ளிட்டோரின் ரசிகர்களால் கொண்டாடப்படும் அவர்களின் பெரும்பாலான பாடல்களுக்கு இசை அமைத்தவர் தேவா. எளிய மக்களின் இசையான கானா இசையை திரையில் அறிமுகம் செய்தவரும் தேவாதான். சில நாள்களுக்கு முன்பு வரை திரைப்படங்கள், தொலைக்காட்சி சார்ந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அவர்,திடீரென நம்மை விட்டு பிரிந்ததைத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.

# சென்னை, கோவை, ஈரோடு திருச்சி உள்ளிட்ட 17 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் சென்னை, நீலகிரி, கோவை உள்ளிட்ட 17 மாவட்டங்களில் (அக்.18) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு வட தமிழக பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு கடலோர ஆந்திர பகுதிகளின் மேல் சுமார் 4.5 கிமீ முதல் 5.8 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (அக்.18) நீலகிரி, கோவை, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், அரியலூர், திருச்சி, பெரம்பலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், ஈரோடு மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

21-ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திருப்பூர், திண்டுக்கல், விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழை பெய்யும்.

22-ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி, நாமக்கல், சேலம், கரூர், ஈரோடு, பெரம்பலூர், அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழை பெய்யும்.

23-ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், திருப்பூர், திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது, அவ்வப்போது கனமழை பெய்யக்கூடும்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில் இலவச வித்யாரம்பம்




சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் 90 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியமிக்க சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில், ஆயுத பூஜையை முன்னிட்டு, சிறு குழந்தைகளின் கல்வித் தொடக்க நிகழ்வான 'நெல் மணிகளில் எழுதுதல்' (வித்யாரம்பம்) நிகழ்ச்சி இந்த அக்டோபர் மாதம் 20ஆம் தேதி காலை 8.30 மணி முதல் நடைபெற உள்ளது. இந்நிகழ்வு முற்றிலும் இலவசமாக நடைபெறுவதால், 3 முதல் 5 வயது வரையிலான குழந்தைகள் அனைவரும் பங்கேற்று பயன்பெறலாம் எனப் பள்ளியின் தலைமையாசிரியர் லெ . சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

குழந்தைகளின் கல்விப் பயணத்தை மகிழ்ச்சியுடனும் பாரம்பரியத்துடனும் தொடங்கும் வகையில், நெல் மணிகளில் எழுதி கற்றலை ஆரம்பிக்கும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு எழுத்தறிவின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு, கல்வியின் முக்கியத்துவத்தையும் பாரம்பரிய வழிமுறைகளையும் அறிமுகப்படுத்தும் நோக்கில் இந்நிகழ்வு நடைபெறுகிறது.

நமது பண்பாட்டில் குழந்தைகளின் கல்வித் தொடக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வித்யாரம்பம் நிகழ்வு, ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி காலங்களில் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படும் வழக்கங்களில் ஒன்றாகும். அந்த வகையில், தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் நடைபெற உள்ள இந்த நிகழ்வு, இளம் குழந்தைகளுக்கு கல்வியின் மீதான முதல் ஆர்வத்தை ஏற்படுத்தும் வாய்ப்பாக அமையும்.

90 ஆண்டுகளுக்கும் மேலான கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட இப்பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்கள் பல்வேறு துறைகளில் முன்னேறி வருவதாகக் குறிப்பிட்ட தலைமையாசிரியர் லே. சொக்கலிங்கம், இளம் வயதிலேயே குழந்தைகளுக்குக் கல்வியின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்துவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

பெற்றோர்களுக்கு தலைமையாசிரியர் வேண்டுகோள்

தங்களது குழந்தைகளின் கல்விப் பயணத்தைப் பாரம்பரியமிக்க முறையில் தொடங்க விரும்பும் பெற்றோர்கள், இந்த இலவச நிகழ்வைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக, 3 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளை அழைத்து வந்து நெல் மணிகளில் எழுதி கல்வியைத் தொடங்கும் வாய்ப்பினைப் பெறுமாறு தலைமையாசிரியர் லெ . சொக்கலிங்கம் அன்புடன் கேட்டுக்கொண்டுள்ளார்.



மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் நடத்திய முக்குலத்தோர் திருவிழா என்னும் பெயரில் முத்துராமலிங்கத் தேவரின் ஜெயந்தி விழா நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக மத்திய அரசு வழக்கறிஞர் திரு ஐயப்பராஜா கலந்து கொண்டார் மற்றும் வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த திரு மோகன் குமார் அவர்களும் கலந்து கொண்டார். பார்வர்டு பிளாக் கட்சியின்தமிழ்மாநிலதலைவர்பிவிகதிரவன்கலந்துகொண்டார்மாநகராட்சிமாமன்றஉறுப்பினர்மாலதிராஜேஷ்கண்ணா பகுதி செயலாளர் ராஜேஷ் கண்ணா உட்பட வழக்கறிஞர் நந்தகோபால் அவர்கள் கலந்து கொண்டு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் அரசு அலுவலகங்களிலும் முத்துராமலிங்கத் தேவர் புகைப்படம் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார் கோவையைச் சேர்ந்த அஜய் வாண்டையார் கலந்துகொண்டார் முக்குலத்தோர் பாதுகாப்பு நலப் பேரவை தலைவர் ஆர் நந்தகோபால், மாநில பொதுச் செயலாளர் ராஜசேகர், மாநிலத் துணைத் தலைவர் ராஜ்குமார், மாரி, சுதந்திரப் புலிகள் இயக்கம் நிறுவனத் தலைவர் கே கார்த்திக் தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த ரமேஷ் நாராயணன் உட்பட மாணவர்களும் பொது மக்களும் அரசியல் கட்சியினரும் பொதுநல அமைப்பினரும் கலந்து கொண்டனர்.



வடகிழக்குபருவமழையைமுன்னிட்டு,தூத்துக்குடிமாநகராட்சிக்குஉட்பட்டமழைவெள்ளத்தால்பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் பெ. மதன் ராஜா நேரில் ஆய்வு செய்தார். மாநகரின் எந்தப் பகுதியிலும் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## தேனி மாவட்டத்தில்

# இலவச கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பு முகாம்

தேனி மாவட்டத்தில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், பெண்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் நோக்கிலும் இலவச கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பு முகாம் நடைபெற்றது.

ரோட்டரிமற்றும் கே. எஸ்.கே. மருத்துவமனை இணைந்து நடத்திய இந்த முகாம்



தேனி, எடமால் தெருவில் உள்ள கே.எஸ்.கே. மருத்துவமனையில் நடைபெற்றது. காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில் 9 வயது முதல் 25 வயது வரையிலான 100 பெண்களுக்கு இலவச கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பு சேவைகள் வழங்கத் திட்டமிடப்பட்டது. பெண்களிடையே கர்ப்பப்பை வாய் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், நோய் வராமல் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இந்த முகாமில் கே.எஸ்.கே. மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் கல்பனா தேவி உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் பங்கேற்று, பெண்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினர். இளம் வயதிலேயே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க முடியும் என்பதால், இதுபோன்ற விழிப்புணர்வு முகாம்கள் பொதுமக்களிடையே பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன

## அச்சிறுப்பாக்கம் ஊராட்சியில்

# பயன்பாட்டில் உள்ள மின்மாற்றியை முட்புதர்கள் சூழ்ந்துள்ளதால் அவ்வப்போது மின்வெட்டு ஏற்படுவதாக குற்றச்சாட்டு

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட76மதூர்ஊராட்சியில் பயன்பாட்டில் உள்ள மின்மாற்றியை முட்புதர்கள் சூழ்ந்துள்ளதால் அவ்வப்போது மின்வெட்டு ஏற்படுவதாக

பொதுமக்கள் குற்றச்சாட்டுவைத்துள்ளனர். எலப்பாக்கம் துணை மின் நிலையத்திற்குட்பட்ட கோட்டகயப்பாக்கம் எஸ் எஸ் 5 கீழ் இயங்கும் மதூர் ஊராட்சி

காலனி தெருவில் செயல்பட்டு வரும் மின்மாற்றி தற்போது விவ



சாய நிலம் குடியிருப்பு பகுதியில் செயல்பாட்டில் இயங்கி வருகிறது. ஆனால் தற்சமயம் மின்மாற்றியை சுற்றி அடர்ந்த முட்புதர்கள் சூழ்ந்துள்ளதால் அவ்வப்போது அப்பகுதியில் மின்தடை ஏற்பட்டு வருகிறது.இது குறித்து பலமுறை மின்வாரிய அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தும் இந்நாள் வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறப்படுகின்றனர்.

ஆகவே வரும் மழைக் காலங்களுக்கு முன்பு மின்மாற்றில் சூழ்ந்த முட்புதர்களை சீர்செய்து தர வேண்டுமென பகுதி மக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

# நீதிமன்ற உத்தரவு: சாத்தூர் ஊராட்சி மன்றத்தலைவராக சாமா. சேட்டு மீண்டும் பொறுப்பேற்பு

# இனிப்புகள் வழங்கி உற்சாக வரவேற்பு

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு ஒன்றியத்திற்குட்பட்ட சாத்தூர் ஊராட்சியின் தலைவராகசாமாசேட்டு என்பவர் செயல்பட்டு வந்தார்.

இந்நிலையில், இடையில் ஏற்பட்ட சில நிர்வாகக் காரணங்கள் மற்றும் பிரச்சனைகள் காரணமாக அவர் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ந்து, தனது தரப்பில் உள்ள நியாயமான கோரிக்கைகள் மற்றும் விளக்கங்களை முன்வைத்து நீதிமன்றத்தை அணுகினார். வழக்கை விசாரித்த நீதிமன்றம், அவர் மீண்டும் சாத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றிட உத்தரவு பிறப்பித்தது.



நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட துறை சார்ந்த உயர் அதிகாரிகள் சாமா சேட்டுவை மீண்டும் ஊராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்பதற்கான அதிகாரப்பூர்வ ஆணையை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, சாத்தூர் ஊராட்சி ன்ற அலுவலகத்தில் சாமா சேட்டு முறைப்படி ஊராட்சி மன்றத் தலைவராக மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வின் போது, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்,ஊராட்சிச்செயலர் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

நீதிமன்றத்தின் இந்த நேர்மையான தீர்ப்பை அடுத்து, கிராம மக்களும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் அவருக்குத்தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து உற்சாகமாக வரவேற்றனர்

# திருமண ஆசை காட்டி, பெண் என்ஜினீயர் பாலியல் பலாத்காரம் கோவையை சேர்ந்த ஜோதிடர் மீது மேலும் ஒரு புகார்

சென்னை அருகே உள்ள மேற்கு தாம்பரம் பகுதியைச் சேர்ந்தவர் 30 வயது இளம்பெண். இவர் தாம்பரத்தில் உள்ள ஒரு தனியார் ஐ.டி. நிறுவனத்தில் இன்ஜினீயராக பணியாற்றி வருகிறார். இவரது வீட்டில் பெற்றோரிடையே அடிக்கடி கருத்து வேறுபாடு மற்றும் குடும்பப் பிரச்சனைகள் ஏற்பட்டு வந்துள்ளன. இதனால் மன உளைச்சலுக்கு ஆளான அப்பெண், தனது தோழியின் அறிவுறுத்தலின் பேரில் யூடியூப் மூலமாக ஜோதிட பலன்களைப் பார்க்கத் தொடங்கினார்.

அப்போது, கோவை பெரியநாயக்கன்பாளையம், நரசிம்மநாயக்கன்பாளையம் ஜோதி காலனியைச் சேர்ந்த ஜோசியர் கார்த்திகேயன் என்பவரின் அறிமுகம் வாட்ஸ்அப் மூலமாக கிடைத்துள்ளது.

ஜோசியர் கார்த்திகேயன், பெண்ணின் தந்தையின் ஜாதகத்தில் தோஷம் இருப்பதாகக் கூறி, சமயபுரம் மாரியம்மன் கோவில்,திருத்தணி முருகன் கோவில் மற்றும் புதுச்சேரி மணக்குள விநாயகர் கோவில்களில்



பரிகார பூஜைகள் செய்ய வேண்டும் என்று நம்ப வைத்துள்ளார். மேலும், 2025-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அப்பெண்ணின் வீட்டிலேயே சிறப்புபூஜைகளும் நடத்தப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, திருமண தோஷப் பரிகாரம் செய்வதற்காக அப்பெண்ணை மட்டும் தனியாக புதுச்சேரிக்கு அழைத்துள்ளார். அங்கு தனியார் விடுதியில் அறை எடுத்துத் தங்க வைத்த கார்த்திகேயன், அப்பெண்ணிடம் தனது காதலைத் தெரிவித்துத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறியுள்ளார். ஆனால், அவரது பேச்சை மறுத்து அப்பெண் சென்னைக்குத் திரும்பியுள்ளார்.

அதன் பின்னரும், குடும்பத்தில் அமைதி திரும்பியதைச் சுட்டிக்காட்டி அப்பெண்ணுடன் பேசி வந்த கார்த்திகேயன், கோவையில் உள்ள மேட்டுப்பாளையம் தனியார் விடுதி, சென்னை மெரினா கடற்கரை அருகில் உள்ள விடுதி மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள தனியார் விடுதி ஆகிய இடங்களுக்கு அப்பெண்ணை வரவழைத்துள்ளார்.

கட்டாயப்படுத்தி, "உன்னைத்தான் நிச்சயம் திருமணம் செய்து கொள்வேன், ஏமாற்ற மாட்டேன்" என்று வாக்குறுதி அளித்து, அப்பெண்ணின் விருப்பத்திற்கு மாறாகத் தொடர்ந்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார். சில மாதங்களாக கார்த்திகேயன் அப்பெண்ணின் தொலைபேசி அழைப்புகளைத் தவிர்க்கத் தொடங்கினார். இதனால் சந்தேகமடைந்த அப்பெண் சமூக வலைதளங்களில் ஆராய்ந்தபோது, திருப்பூர் பகுதியைச் சேர்ந்த மற்றொரு பெண்ணையும் இதேபோல "திருமண பரிகாரம்" என்று கூறி கார்த்திகேயன் ஏமாற்றியது தெரியவந்தது. மேலும், கார்த்திகேயனுக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டதும் அம்பலமானது.

இது குறித்து கார்த்திகேயனிடம் தட்டிக்கேட்டபோது,"எனக்கு அரசியல்வாதிகள், முக்கிய அரசு அதிகாரிகள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் வரை அனைவரையும் தெரியும். என்னைப் பற்றி யார் கிட்ட வேணா புகார் குடுத்துக்கோ" என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

ஜோதிட நம்பிக்கையைப்பயன்படுத்தித்தனது வாழ்க்கையைச் சீரழித்த ஜோசியர் கார்த்திகேயன் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தனக்கும்தனதுகுடும்பத்தினருக்கும் உரியப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட பெண் சென்னை மேற்கு தாம்பரம் இணை ஆணையர் அவர்களிடம் புகார் மனு அளித்துள்ளார்.



கன்னியாகுமரி மாவட்ட வன அலுவலர் உத்தரவின்படி, முப்பந்தல் அருகே கண்ணுப்பொத்தைக் குளக்கரையில் பனை விதை நடும் நிகழ்வு நடைபெற்றது. பணகுடி பிரிவு வனவர் மற்றும் பணியாளர்கள் வழிகாட்டுதலில், சத்தியம் கல்லூரி முதல்வர் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் பேராசிரியர்கள், மாணவமாணவிகள் கலந்து கொண்டு பனை விதைகளை நட்டனர்.

# வல்லநாடு துப்பாக்கி சுடுதளத்தில் மூத்த காவல் அதிகாரிகளுக்கான துப்பாக்கி சுடும் போட்டி

## ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பிரிவில் பிஸ்வஜித் பாண்டா முதலிடம்

## வெற்றி பெற்ற அதிகாரிகளுக்குக் கோப்பைகள் கேடயங்கள் வழங்கிப் பாராட்டு



தூத்துக்குடி தென் மண்டல காவல்துறையின் மூத்த அதிகாரிகளுக்கான துப்பாக்கி சுடும் போட்டி மதுரை மற்றும் திருநெல்வேலி சரகங்களில் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக,திருநெல்வேலி சரக மூத்த காவல் அதிகாரிகளுக்கான துப்பாக்கி சுடும் போட்டி, தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு துப்பாக்கி சுடுதளத்தில் அக்டோபர் 15, 16 ஆகிய தேதிகளில் இரண்டு நாட்கள் நடைபெற்றது.

திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில், திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் தேஷ்முக் சேகர் சஞ்சய் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா. சிவபிரசாத் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசோக்குமார் மற்றும் திருநெல்வேலி சரகத்தைச் சேர்ந்த காவல் உதவி கண்காணிப்பாளர்கள், காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட மூத்த காவல் அதிகாரிகள் பங்கேற்றனர்.

ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பிரிவில் திருநெல்வேலி ஊரக உட்கோட்ட காவல் உதவி கண்காணிப்பாளர் பிஸ்வஜித் பாண்டா முதலிடத்தைப் பிடித்தார். திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு இரண்டாம் இடத்தையும், தூத்துக்குடி ஊரக உட்கோட்ட காவல் உதவி கண்காணிப்பாளர் அன்ஜித் நாயர் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இன்சாஸ் (INSAS) துப்பாக்கி சுடும் போட்டியில் திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் தேஷ்முக் சேகர் சஞ்சய் முதலிடத்தைப் பிடித்தார். திருநெல்வேலி ஊரக உட்கோட்ட காவல் உதவி கண்காணிப்பாளர் பிஸ்வஜித் பாண்டா இரண்டாம் இடத்தைப் பெற்றார். தூத்துக்குடி ஊரக உட்கோட்ட காவல் உதவி கண்காணிப்பாளர் அன்ஜித் நாயர், இ.கா.ப., மற்றும் ராமநாதபுரம் மாவட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் திருப்பதி ஆகியோர் மூன்றாம் இடத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

தொடர்ந்து ரிவால்வர் துப்பாக்கி சுடும் போட்டியில் திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு,இ.கா.ப.,முதலிடத்தையும், திருநெல்வேலி ஊரக உட்கோட்ட காவல் உதவி கண்காணிப்பாளர் பிஸ்வஜித் பாண்டா, இ.கா.ப., இரண்டாம் இடத்தையும் பெற்றனர். தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசோக்குமார் மூன்றாம் இடத்தைப் பிடித்தார்.

போட்டியில் வெற்றி பெற்ற காவல் அதிகாரிகளுக்குத்திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு கோப்பைகள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.



கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், வடகிழக்கு பருவமழை தொடங்குவதை முன்னிட்டு மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கைநடவடிக்கைகள்குறித்தஆலோசனைக்கூட்டம்,விருத்தாசலம்கோட்டாட்சியர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் வேப்பூர் வட்டாட்சியர் ராமர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மைத்துறை,வேளாண்பொறியியல்துறை,காவல்துறை,தீயணைப்புத்துறை உள்ளிட்டபல்வேறுதுறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



ஏ.பி.ஜெ அறக்கட்டளை சார்பாக தலைவர் கோபிநாத் தலைமையில் ராணிப்பேட்டை விஷ்வாஸ் மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக் கான சிறப்புப் பள்ளியில் அறக்கட்டளை அன்னம் பகிர்வோம் திட்டம் மூலம் குழந்தைகளுக்கு அப்துல்கலாம் பிறந்தநாளை முன்னிட்டு இனிப்பு மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் தலைவர் கமலாகாந்தி மற்றும் ஆற்காடு நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ்பாண்டியன் உடன் அறக்கட்டளை நிர்வாக குழு உறுப்பினர் கிஷோர்குமார் உறுப்பினர்கள் ஜெய்லா இர்பான் சுரேஷ் கலந்துகொண்டனர்கள்.



# கோவையில் நடைபெற்ற அரசுவிழா, முதலமைச்சர் விஜய் பங்கேற்று பல்வேறு திட்ட பணிகளை துவக்கி வைத்தார்

தமிழக முதல்வர் விஜய் கோவை காந்திபுரம் பகுதியில் 301 கோடியே, 71 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பெரியார் அறிவுலகம் எனும் மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மைய திறப்பு விழாவில் கலந்து கொண்டு அதனை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். முன்னதாக பெரியார் அறிவுலகம்வாயிலில்அமைக்கப்பட்டுள்ள, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினார். கோவை வந்தடைந்த தமிழக முதல்வர் விஜய்க்கு தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ், ஆகியோர் மலர் கொத்து கொடுத்து வரவேற்பு வழங்கினர். இதனைத் தொடர்ந்து தரை மற்றும் ஏழு தலங்களுடன் ஒரு லட்சத்து 98 ஆயிரம் சதுர அடி கட்டட பரப்பளவில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் உலகத்தரத்தில் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவியல் மையமான பெரியார் அறிவுலகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து தரைதளத்தில் 356 இருக்கைகளுடன் கூடிய கலையரங்கம், மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம், 90 இருக்கைகளுடன் கூடிய கோளரங்கம், மற்றும் விண்வெளி பயண மின்தூக்கி, உள்ளிட்ட அனைத்தையும் கண்டு ரசித்து பள்ளி மாணவ மாணவியர்களிடையே கலந்துரையாடினார். மேலும் பெரியார் அறிவுலகத்தில் நிறுவப்பட்டுள்ள அனைத்து அரங்குகள் குறித்து ஆய்வு செய்தார். முதல் தளத்தில் வரவேற்புரை மற்றும் அறிவியல் மையம், இரண்டாம் தளத்தில் குழந்தைகளுக்கான நூலகம், மற்றும் சொந்த புத்தகம் படிக்கும் பிரிவு, மூன்றாம் தளத்தில் போட்டி தேர்வுகளுக்கான நூலகம், மற்றும் கிளை நிர்வாகஅலுவலகம், நான்காம் தளத்தில் தமிழ் புத்தகப் பிரிவு,மற்றும் பருவ இதழ்கள் பிரிவு, ஐந்தாம் மற்றும் ஆறாம்தளங்களில்ஆங்கில புத்தகப் பிரிவு, மற்றும் தொழில் முனைவோர் மையம், ஏழாம் தளத்தில் அறிவியல் மையம், திறந்தவெளி மற்றும் மின் நூலகம், மேல் தளத்தில் 100 இருக்கைகளுடன் கூடிய மின்னோக்கு மையம், அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு நடத்தினார். தொடர்ந்து தமிழக முதல்வர் கோவையில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, 408 கோடியே 25 லட்ச ரூபாய், செலவிலான 89 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 32 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 144 புதிய கட்டட பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் 9343 பயனாளிகளுக்கு, 34 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

# செங்கோட்டை மற்றுல் இலத்தூர் அரசு மருத்துவமனையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் ஆய்வு



தென்காசி மாவட்டம், செங்கோட்டை அரசு மருத்துவமனை மற்றும் இலத்தூர் அரசு மருத்துவமனையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மருத்துவமனையின் சுகாதார நிலை, நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும்மருத்துவப்பரிசோதனைகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும்மருத்துவச்சேவைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.மேலும்,மருத்துவமனை வளாகத்தின் தூய்மைமற்றும்நோயாளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்தும் பார்வையிட்டார்.கடந்த சில நாட்களுக்கு முன்பு தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் கட்டுவிரியன் பாம்பு கடித்து ஒருவர் பலியான சம்பவத்தைதொடர்ந்துகடையநல்லூர் மருத்துவமனையில் ஆய்வு நடத்தினார் அதனைத் தொடர்ந்து இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நாடாளுமன்றம்மாநிலங்களவைமற்றும் மக்களவை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீ குமார் திமுக தலைமையின் உத்தரவை தொடர்ந்து அதிகாலையில் செங்கோட்டை மற்றும் இலத்தூர் மருத்துவமனைகளில் ஆய்வு செய்தது பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பை அடைந்துள்ளது சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுபோன்று திடீரென ஆய்வுக்குவரும் பொழுது நோயாளிகள் படும் பாடும் மருத்துவமனைகளில் பணிக்கு வராத செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுப்பதற்கான ஆதாரமும் மேலும் மருத்துவமனைகளில் செய்ய வேண்டிய சுகாதாரப் பணிகள் மருத்துவ உபகரணங்கள் ஆகியவை குறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தரவும் இது போன்ற ஆய்வுகள் கைகொடுப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர்

இந்த ஆய்வின்போது செங்கோட்டை ஒன்றிய திமுகச் செயலாளர் ரவிசங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி, முன்னாள் ஒன்றியச் செயலாளர் பரமசிவன் மற்றும் திமுக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# 6வது தேசிய Hand to Hand Fighting Sports சாம்பியன்ஷிப் போட்டியில், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் 8 பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர்



ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் செப்டம்பர் 18 முதல் 20ஆம் தேதி வரை நடைபெற்ற 6-வது தேசிய Hand to Hand Fighting Sports சாம்பியன்ஷிப் போட்டியில், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் 3 தங்கம், 4 வெள்ளி, 1 வெண்கலம் என மொத்தம் 8 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

தேசியத் தலைவர் பிரதீப் சிங் மற்றும் தமிழ்நாடு தலைவர் டாக்டர் முகமது அனாஸ் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி நடைபெற்ற இப்போட்டியில், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த T.M. குமார், T.M. நவீன்குமார், J. விஷ்ணு, R. மோனிஷ் கண்ணன், M. கிஷோர், V. யுவஷாம், G. விஸ்வா, R. விக்னேஷ், S. ரித்திஷ் குமார், S. டேரியஸ் உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்று தங்களது திறமையை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்து மூன்று தேசியப் போட்டிகளில் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ள சென்னை மாவட்ட வீரர்களுக்குப் பயிற்சியாளர்கள், பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

தேசிய அளவில் சென்னை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த அனைத்து வீரர்களுக்கும் சென்னை மாவட்ட Hand to Hand Fighting Sports சார்பில் மனமார்ந்த வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## பொங்கல் வேஷ்டி, சேலை நெசவுக் கூலி நிர்ணைய அரசாணைக்கு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு வரவேற்பு: கூடுதல் கால அவகாசம் வழங்கவும் கோரிக்கை



பொங்கல் திருநாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் இலவச வேஷ்டி மற்றும் சேலை உற்பத்திக்கான கூலியை நிர்ணயம் செய்ய தமிழக அரசால் அமைக்கப்பட்ட ஐவர் குழுவிடம், தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கடந்த 15.09.2026 அன்று வேஷ்டி ஒன்றுக்கு 24.48 ஆகவும், சேலை ஒன்றுக்கு 56.42 ஆகவும் நிர்ணயிக்க வேண்டும் என விரிவான கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இச்சூழலில், ஒரு மாத கால பரிசீலனைக்குப் பிறகு (16.10.2026) அன்று தமிழகஅரசுசார்பில்வேஷ்டி ஒன்றுக்கு 19.04 ஆகவும், சேலை ஒன்றுக்கு 45.76 ஆகவும் கூலியை உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விசைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில்

கொண்டு இக்கூலி உயர்வை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்புதனதுமனமார்ந்த வரவேற்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டுள்ளது. அதேவேளையில், தற்காலப் பணவீக்கம், மின்கட்டணம் மற்றும் உதிரிபாகங்களின் கூடுதல் செலவினங்களை ஒப்பிடுகையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இக்கூலி போதுமானதாக இல்லை என்பதை அரசின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்றுள்ள கூட்டமைப்பினர்,பாரம்பரியமிக்க விசைத்தறித் தொழிலையும் நெசவாளர் குடும்பங்களின் பொருளாதார நிலையையும் பாதுகாக்கும் உயரிய நோக்கில், வரும் காலங்களில் எங்களது நியாயமான கோரிக்கையினை முழுமையாகப் பரிசீலித்து மேலும் கூலியை உயர்த்தி வழங்கிட அரசு ஆவன செய்யும் என்ற நம்பிக்கையோடு இக்கோரிக்கையை முன்வைப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். மேலும், தற்போதைய சூழலில் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கை வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் முழுமையாக எட்டி முடிப்பது விசைத்தறியாளர்களுக்கு பெரும் சவாலாக உள்ளதால், பொங்கல் வேஷ்டி, சேலை உற்பத்திக்கான கால அவகாசத்தை கூடுதலாக இரண்டு மாதங்கள் நீட்டித்து வழங்கிட வேண்டும் எனவும் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் அரசுக்குவேண்டுகோள் விடுத்து, மீண்டும் ஒருமுறைதமிழகஅரசுக்குத் தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் சத்தியமங்கலம் வட்டம், தொட்டம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிய வகுப்பறை கட்டிடத்தினை பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.தமிழ்ச்செல்வி முன்னிலையில் நேற்று (17.10.2026) திறந்து வைத்தார்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நேற்று (17.10.2026) ஈரோடுமாவட்டம்,கெட்டிச்செவியூர்தொடக்கவேளாண்மைகூட்டுறவுகடன்சங்கத்தின்புதியஅலுவலககட்டிடத்தினை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.

## தூத்துக்குடி மன்னார் ஐயர் காலனியில் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்மன் தசரா குழுவின் மூன்றாம் ஆண்டு விழா!

### 500பேருக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது



தூத்துக்குடி மன்னார் ஐயர்காலனி,லெவிஞ்சிபுரம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்மன் தசரா குழுவின் மூன்றாம் ஆண்டுவிழாவெகுவிமரிசையாக நடைபெற்றது. விழாவின்முக்கியநிகழ்வாகப் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மிழக வெற்றிக் கழகத் தலைவர் மற்றும் முதலமைச்சர்சி.ஜோசப்விஜய் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழகப் பொதுச்செயலாளர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் என். ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், சட்டமன்ற உறுப்பினரும் தூத்துக்குடி மத்திய மாவட்டச் செயலாளருமான ஸ்ரீ ஸ்ரீநாத் மற்றும் கட்சி நிர்வாகிகளின் வழிகாட்டுதலின்படியும் விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தூத்துக்குடி மத்திய மாவட்டம், 44-வது வார்டு கழகச் செயலாளர் Y.விஜய்கண்ணன் மற்றும் ஸ்ரீசாமுண்டீஸ்வரி அம்மன் தசரா குழுவினர் இணைந்து விழாவிற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

விழாவிற்கான பணிகளில் ஏ. மருதுபாண்டி, கே.சித்திக், கே.பெருமாள், மு.வசிபா ண்டியன், சே.ராமு உள்ளிட்டோர் ஈடுபட்டனர்.

இந்நிகழ்ச்சிக்கு தூத்துக்குடி மத்தி மாவட்ட இணைச் செயலாளர் எம்.கோல்டன் (முன்னாள் மாமன்ற உறுப்பினர்), மாநிலக் கழகத் துணைப் பொதுச்செயலாளர்கள் எம்.சுபத்ரா முருகன், எஸ்.டி.ஆர். சாமுவேல் ராஜ் மற்றும் மத்திய மாவட்டக் கழக நிர்வாகி எஸ். கிஷோர் ஆகியோர் வழிகாட்டுதல்களை வழங்கினர்.

மேலும், மத்திய மேற்கு பகுதி செயலாளர் பி.பெருமாள்,தெற்கு பகுதி செயலாளர் ஏ. இசக்கிமுத்து, மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் பி.திருமுரு கராஜ், கீழ் மேற்கு பகுதி இணைச் செயலாளர் ஏ.செந்தில்குமார், கீழ் மேற்குபகுதிசெயற்குழு உறுப்பினர் எம்.கார்த்திக், கழக நிர்வாகி ஏ.விமல் ஜி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

மூன்றாம் ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியில் பொதுமக்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.



ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, வார்டு15 அன்னை சத்யா நகர் அருகில் பிச்சைகாரன்பள்ளம் ஓடை தூர்வாரும் பணியினை கைத்தறி துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி நேற்று (17.10.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , மாநகராட்சி துணை ஆணையாளர் செந்தில்குமார் ரத்னம் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, வார்டு15 சோளீஸ்வரர் திருக்கோவில் அருகில் காவேரி ஆற்றில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் சார்பில் நடைபெற்ற ஒத்திகை நிகழ்ச்சியினை கைத்தறி துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி நேற்று (17.10.2026) துவக்கி வைத்து, பார்வையிட்டார். உடன் மாநகராட்சி துணை ஆணையாளர் செந்தில்குமார் ரத்னம் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நேற்று (17.10.2026) ஈரோடுமாவட்டம்,கெட்டிச்செவியூர்தொடக்கவேளாண்மைகூட்டுறவுகடன்சங்கத்தின்புதியஅலுவலககட்டிடத்தினை திறந்து வைத்தார். உடன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.

## 'JD wanted quick chat': Katie Zacharia was interrupted by Trump's adviser midinterview before White House exit



*Katie Zacharia is out as White House press secretary, less than one week into assuming the key role. Her appointment had come months after Karoline Leavitt, a long time adviser of US President Donald Trump, left the post in August.*

*A report has now revealed the moment she was called in for a chat with US Vice President JD Vance and subsequently told she is being let go. According to Wall Street Journal, Zacharia was seated for an interview with the publication when she was interrupted by Jason Miller, a senior adviser to Trump.*

*"JD wanted to chat with us real quick," Miller said referring to the vice president, WSJ said in a report. She never returned to continue the interview or her job as Trump's press secretary, the publication further said.*

*It was not clear in the report what Miller told Zacharia or what conversation did she have with the vice president. However, according to an AP report, Zacharia had dinner with JD Vance and his family on Friday evening.*

*'Running on no sleep and high adrenaline'*

*Katie Zacharia was reportedly feeling weary at around midday on Friday, before her exit. "I'm just running on no sleep and high adrenaline and probably too much caffeine and no food," she was quoted as saying by WSJ.*

*Zacharia had been under scrutiny ever since her inaugural briefing as the press secretary. She took questions from just three reporters during her nearly 15-minute media interaction on Monday.*

*She later traveled with Trump when he held rallies on Wednesday and Thursday in Alaska, Arizona and Montana - but did not hold more press briefings, AP reported.*

*"I hope to be able to build the trust and confidence of everyone around me," she said in a rocky Fox News interview by Sean Hannity, who is known to be friendly with Trump.*

*"Why not just say, 'I went to Pepperdine law school and then took a different career path and I took the bar once and didn't pass it?'" Hannity asked her amid criticism over her allegedly not clearing the bar exam in California and yet referring to herself as a lawyer.*

*Reports of Katie Zacharia "transitioning out" of her press secretary role emerged on Friday. According to AFP, Trump had made it clear he was ready to see the spokesperson go amid criticism over her professional background and much-mocked first press briefing.*

*"I said, 'Katie, is this for you?,'" Trump told reporters. "I said, 'Katie, you don't have to do this'...I said to her, 'Honestly if I were you I'd reconsider.'"*

*Apart from appearing to not be honest about failing a bar exam and being mocked over her first media interaction, Zacharia further stirred controversy on Thursday when she disparaged China, weeks after Trump hosted Xi Jinping in Washington.*

*"I remember this very distinctly, having just come from China, thinking, 'How is China the next country on the horizon? They don't even have proper toilets,'" she said in an interview. According to AFP, Chinese Foreign Ministry spokeswoman Mao Ning reacted to her remarks, urging Zacharia to "visit China more often."*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.